LIBRARY
12 OCT 2015
EASTERN UNIVERSITY

**EASTERN UNIVERSITY, SRI LANKA**

**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**
**EXTERNAL DEGREE**

**Part 111 (4th Year) Examination in Bachelor of Business Administration – 2010/2011**

**(August/ September/October – 2015)**

**(Proper/Repeat/Re-Repeat)**

**EXB 403: Strategic Management**

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

கீழே தரப்பட்டுள்ள விடய ஆய்வை வாசித்து அதன் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

## கெமிக்கல் கம்பனியாலான நிறுவன கொள்வனவு / கைப்பற்றல்(Acquisition by Chemical Ltd.)

கெமிக்கல் லிமிட்டட் (Chemical Ltd.) சமீப காலம் வரை பல ஆண்டுகளுக்கு மேலாக தனது இலாபத்தன்மையில் ஒரு நிலையான அதிகரிப்பை அடைந்துள்ளது. இந்நிறுவனமானது கடுமையான போட்டியை எதிர்கொள்கின்றது. மற்றும் இதன் இயக்குனர்கள் , கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நிறுவனத்தின் செயற்திறன் பற்றிய முக்கிய பங்குதாரர்களால் வெளியிடப்பட்ட அதிருப்தியை பற்றி கருத்திற்கொண்டிருந்தனர். இக்காலத்தில் இக்கம்பனியின் பங்கிலாபம் நிலையான விகிதத்தில் அதிகரித்துள்ளது, ஆனால் அதன் பங்கு விலையானது முன்னர் போல் ஒரே விகிதத்தில் வளர்ச்சியடையவில்லை.

இக்கம்பனியின் நேரடிப்போட்டியாளரான கெம்கோ லிமிட்டட் (Khemco Ltd.) ஆனது இலாபத்தன்மை குறைந்து கொண்டு செல்லும் நிலையிலுள்ளது. பலதரப்பட்ட பங்குதாரர்களைக் கொண்ட இக்கம்பனியின் பெரும்பாலானோர் நிதி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாவர். கெம்கோ லிமிட்டட் (Khemco Ltd.) ஆனது அதன் கீழ்-முதலீட்டிற்காக கடுமையான விமர்சனத்தை எதிர் நோக்கியது அத்தோடு இது கடந்த இரண்டு வருடத்திற்கு மேலாக எந்தவொரு உற்பத்தி அபிவிருத்தியினையும் அடைந்திருக்கவில்லை. ஒரு கருத்தொருமித்த ஊடகப்பிரச்சாரத்தை தொடர்ந்து, கெம்கோ லிமிட்டட் (Khemco Ltd.) இன் மேல் அதன் நீர் மாசுபடுத்தல் நடவடிக்கைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது (கழிவுகளை ஆற்றினுள் வெளியேற்றியமை).

கெமிக்கல் லிமிட்டட் (Chemical Ltd.), கெம்கோ லிமிட்டட் (Khemco Ltd) ஐ கைப்பற்றுவதற்கான தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும், கைப்பற்றப்பட்டால் கெம்கோ

லிமிட்டட் (Khemco Ltd.) ஆனது முற்றாக மூடப்படுமா அல்லது கைப்பற்றியதன் பின்னரான உற்பத்தி நடவடிக்கை தொடரப்படுமா என்ற தீர்மானம் கெமிக்கல் லிமிட்டட் (Chemical Ltd.) இன் இயக்குனர்களினால் தீர்மானிக்கப்படும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முக்கியமான ஊழியர் பணி நீக்கம் பின்பற்றப்படும்.

<u>வினாக்கள்</u>

(அ) இவ்விடய ஆய்விலிருந்து தந்திரோபாய முகாமைத்துவத்துடன் தொடர்பு பட்ட எண்ணக்கருக்களை அடையாளம் கண்டு அவற்றை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) நிறுவன கொள்வனவு தந்திரோபாயத்தின் (Acquisition) சாதக பாதகங்களை அடையாளம் காண்க.

(07 புள்ளிகள்)

(இ) இவ்விரு நிறுவனங்களுக்கும் தனித்தனியாக நீங்கள் பரிந்துரைக்கும் தந்திரோபாயங்களை தந்து அவற்றிக்கான காரணங்களையும் தருக.

(06 புள்ளிகள்)

**(மொத்த புள்ளிகள் 20)**

**02)** அ) ஒரு நிறுவனத்தின் வியாபார அலகானது (**SBU**) பயன்படுத்த கூடிய ஐந்து வேறுபட்ட போட்டி தந்திரோபாய தெரிவுகளை (**Business Level Strategies**) வரிசைபடுத்தி அவை ஒவ்வொன்றும் பிரயோகிக்க கூடிய சந்தர்ப்பங்களை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

ஆ) வெளியக காரணி மதிப்பாய்வு (**External factor evaluation (EFE)**) உள்ளக காரணி மதிப்பாய்வு **(Internal factor evaluation (IFE)** என்பன சூழல் ஆய்வின் முக்கிய கூறுகளாகும். இவை இரண்டையும் விபரிப்பதுடன் ஒரு நிறுவனத்திற்கு இவை இரண்டையும் தயாரிக்குக.

(07 புள்ளிகள்)

இ) வளர்ச்சி தந்திரோபாயங்களை (**growth strategies**) குறைப்பு/தற்காப்பு தந்திரோபாயங்களிலிருந்து (**retrenchment strategies**) வேறுபடுத்துவதுடன் இவை இரண்டிற்கும் கீழே வரக்கூடிய தந்திரோபாயங்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

**(மொத்த புள்ளிகள் 20)**

அ) தந்திரோபாய அமுல்படுத்தலில் (**strategy implementation**) பங்காற்றுகின்ற நிர்வாக கடமைகளை (**administrative tasks**) வரிசை படுத்தி அவற்றை சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

ஆ) ஐந்து-படிமுறை பின்னூட்டல் மாதிரியை (**Five-Step Feedback Model**) பயன்படுத்தி தந்திரோபாய மதிப்பாய்வை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

இ) ஒரு நிறுவனத்தினுடைய பலம் பலவீனங்களை அடையாளம் காண்பதற்கு எவ்வாறு பெறுமதி-சங்கிலி ஆய்வு (**value-chain analysis**) உதவமுடியும் என்பதை தருக. (06 புள்ளிகள்)

**(மொத்த புள்ளிகள் 20)**

அ) ஒரு பாரிய நோக்க வாக்கியத்தை(**mission statement**) உருவாக்குகின்ற போது உள்ளடக்கப்படவேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை? அவற்றை உள்ளடக்குவதற்கான காரணங்கள் யாவை? (05 புள்ளிகள்)

ஆ) தந்திரோபாய தெரிவு தொடர்பாக பொறுத்த தன்மை (**suitability**) சாத்திய தன்மை (**feasibility**) ஏற்றுக்கொள்ளும் தன்மை (**acceptability**) போன்ற எண்ணக்கருக்களை விளக்குவதுடன் இவ் ஒவ்வொன்றையும் மதிப்பிடுவதற்கு பயன்படுத்த கூடிய வேறுபட்ட கருவிகளையும் (**tools**) முறைகளையும்( **methods**) தருக.

(08 புள்ளிகள்)

இ) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக முக்கிய அக்கறையுடையவர்களையும் (**stakeholders**) அவர்களின் தேவைகளையும் (**claim**) அடையாளம் கண்டு அவர்களின் வலு (**power**) மற்றும் அக்கறையின் (**interest**) அடிப்படையில் அவர்களை அக்கறையுடையோர் வரைபடத்தில் (**stakeholder mapping**) குறிப்பிடுக (வலுவுக்கான மூலகங்களை (**source**) தெளிவாக அடையாளம் கண்க).

(07 புள்ளிகள்)

**(மொத்த புள்ளிகள் 20)**

Q5) அ) தந்திரோபாய முகாமைத்துவ செயன்முறையை (**strategic-management process**) தந்திரோபாய முகாமைத்துவ மாதிரியைக் (**Strategic Management Model**) கொண்டு சுருக்கமாக விபரிக்குக.

(06 புள்ளிகள்)

ஆ) ஒரு **GE** வார்புரு (**GE Matrix**) எவ்வாறு **BCG** வார்புருவை (**BCG Matrix**) விட சிறந்ததாக இருக்க முடியும்? உங்களுடைய விடையை நியாயப்படுத்துக.

(07 புள்ளிகள்)

இ) போட்டரின் ஐந்து போட்டி காரணிகளை (**competitive forces**) சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

**(மொத்த புள்ளிகள் 20)**